செ. கு. எண்: 007 நாள் : 20.01.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்களின்

அறிக்கை – 20.1.2015

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பென்னாகரம் - ஒகேனக்கல் நெடுஞ்சாலையில் இன்று (20.1.2015) தருமபுரியிலிருந்து ஒகேனக்கல் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து, ஒகேனக்கல் அருகில் மலைப் பாதை வளைவில் கவிழ்ந்து ஆழமான பள்ளத்தில் விழுந்ததில் பாலக்கோடு வட்டம், கம்மாளப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோபாலகிருஷ்ணன் என்பவரின் மனைவி திருமதி மாதம்மாள், திரு. முருகன் என்பவரின் மகள் செல்வி சிவசங்கரி, அதகப்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. காளியப்பன் என்பவரின் மனைவி திருமதி வெங்கட்டம்மாள், திரு. கூனன்காளி என்பவரின் மகன் காளியப்பன், பென்னாகரம் வட்டம், மல்லாபுரம் கிராமம், செங்கானூர் தரப்பு பகுதியைச் சேர்ந்த திரு. மாதப்பன் என்பவரின் மகன் சகாதேவன், தருமபுரி நகரத்தைச் சேர்ந்த திரு. சொக்கலிங்கம் என்பவரின் மகன் மணிவண்ணன், தொம்பரகாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மகன் செல்வன் மணிகண்டன் ஆகியோர் சம்பவ இடத்திலேயும்; தருமபுரி நகரத்தைச் சேர்ந்த திரு. நாராயணசாமி என்பவரின் மகன் சுதாகர் மற்றும் நடப்பனஅள்ளி, பாறைக்கொட்டாய் பகுதியைச் சேர்ந்த திரு. மாரிமுத்து என்பவரின் மகன் துரைசாமி ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் 44 நபர்கள் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன். காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளித்திட மருத்துவமனை அதிகாரிகளுக்கும், தருமபுரி மற்றும் சேலம் மாவட்ட நிர்வாகங்களுக்கும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த துயரச் சம்பவம் குறித்த தகவல் கிடைத்தவுடன், உயிரிழந்தவர்களின் குடும்பங்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவும், காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனைகளில் தேவையான சிகிச்சை அளித்திடவும் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு P. பழனியப்பன் மற்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு V. செந்தில் பாலாஜி ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**